செய்தி வெளியீடு எண்: 535 நாள்: 26.8.2009

<u>பத்திரிக்கைச் செய்தி</u>

சென்னை நகரின் இடநெரிசலைக் கட்டுப்படுத்த, குறிப்பாக மத்திய வியாபாரப் பகுதிகளில் (கொத்தவால்சாவடி பகுதியில்) நெரிசலை தவிர்ப்பதற்காக சென்னை பெருநகர் வளர்ச்சி குழுமத்தால் கோயம்பேடு மொத்த விற்பனை அங்காடி வளாகம் 1988 ஆம் ஆண்டில் மேதகு ஆளுநர் டாக்டர் பி.சி. அலெக்சாண்டர் அவர்களால் அடிக்கல் நாட்டப்பட்டு 1996 ஆம் ஆண்டு 28.08.1996ம் நாள் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் திரு. மு. கருணாநிதி அவர்களால் துவக்கி வைக்கப்பட்டது. இந்த அங்காடி வளாகம் 1996 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் முதல் முழு அளவில் செயல்படத் தொடங்கியது.

அங்காடி வளாகம், சென்னை நகரின் நெரிசலற்ற வெளிப்புற பகுதியில் அமைந்திருந்த போதிலும், நகர மக்கள் எளிதாக வந்த செல்லும் வகையில், மாநகரின் எல்லா முக்கிய பகுதிகளையும் இணைக்கும் சென்னை புறநகர் பேருந்து நிலையம், அங்காடி வளாகத்தின் அருகில் அமைந்துள்ளது.

அங்காடி வளாக மேம்பாட்டு பணிகளை சுமார் 295 ஏக்கர் பரப்பில் மூன்று பகுதிகளாக செயல்படுத்த திட்டமிடப்பட்டு, முதல் பகுதியாக அழுகும் பொருள்கள் மொத்த வியாபார வளாகம் சுமார் 60 ஏக்கர் பரப்பில் சுமார் ரூ.40.00 கோடி (ரூபாய் நாற்பது கோடி) திட்ட மதிப்பீட்டில் அமைக்கப்பட்டது.

காய்கறி, கனி மற்றும் மலர் ஆகிய மூன்று அங்காடிகளில் வெவ்வேறு அளவுகளில் கட்டப்பட்டுள்ள மொத்தம் சுமார் 3154 கடைகளை கொண்ட இந்த வளாகம் ஆசியாவில் உள்ள மிகப்பெரிய அங்காடி வளாகங்களில் ஒன்றாக திகழ்கின்றது. இந்த அங்காடி வளாகம் பல்வேறு உள்ளமைப்பு வசதிகளுடன் அமைக்கப்பட்டுள்ளது. பல்வேறு பகுதியிலிருந்தும் தினமும் சுமார் ஒரு இலட்சம் மக்கள் வியர்பாரம் தொடர்பாக இந்த வளாகத்திற்கு வந்து செல்கின்றனர்.

சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமம், சென்னை மாநகரின் வளர்ச்சிக்காக பல்வேறு திட்டங்களை வகுத்து செயல்படுத்தி வருகின்றது. அதே சமயம் வெறும் திட்டங்களை மட்டும் வகுத்து செயல்படுத்துவது மட்டுமல்லாமல், துறை சம்பந்தப்பட்ட சமுதாய வளர்ச்சிப் பணிகளிலும் சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமம் மற்றும் அங்காடி நிர்வாகக் குழு தங்களுடைய செயல்பாட்டை விரிவுபடுத்திக் கொண்டிருக்கிறது. இதன் மூலம் வளர்ச்சித் திட்டங்களின் முழு பயன்களும் மக்களை சென்றடைய வழி வகை செய்கிறது.

அவ்வாறான சமுதாய நலவளர்ச்சி பணிகளில் ஒன்றாக கோயம்பேடு மொத்த விற்பனை அங்காடி வளாகத்தில் வியாபாரிகளின் ஒத்துழைப்புடன்இன்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இந்த மரக்கன்றுகள் நடும்விழா பல்வேறு உயரிய நோக்கங்களை கொண்டுள்ளது. உலகின் சுற்றுச்சூழலை மேம்படுத்தவும், உலகம் வெப்பமயமாதலில் இருந்து கட்டுப்படுத்தவும் மரக்கன்றுகள் நட்டு பாதுகாப்பதின் நோக்கத்தை பற்றி மக்களிடையே ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்துவதே இந்த விழாவின் முக்கிய குறிக்கோளாகும். நாம் ஒவ்வொருவரும் நம்மால் முடிந்த மட்டும் மரக்கன்றுகள் நடுவது, நட்ட மரக்கன்றுகளை பாதுகாப்பது, காடுகள், மலைகளில் உள்ள மரங்களை அழிக்காமல், அவைகளை பாதுகாத்து வளர்ப்பது போன்றவை தற்போதைய மக்களின் முக்கிய கடமையாகும். நம்மை சுற்றியுள்ள பகுதிகளில் மரக்கன்றுகள் நட்டு, பாதுகத்து வளர்ப்பதன் மூலம் தான் இந்த உலகத்தை பயமுறுத்திக் கொண்டிருக்கும் "உலக வெப்பமயமாதல்" அழிவிலிருந்து நம்முடைய வருங்கால சந்ததியினரை காப்பாற்றலாம். எனவே நாம் அனைவரும் மரக்கன்றுகளை பாதுகாத்து வளர்த்து சுற்றுச்சூழலை மேம்படுத்துவோம்.

அங்காடி நிர்வாகக் குழுவால் அங்காடி வளாகத்தின் சுற்றுச்சூழல் மேம்பாட்டிற்காக, மரக்கன்றுகள் நடும் விழா மற்றும் வியாபாரிகள், தொழிலாளர்கள் நலன் கருதி சென்னை கிழக்கு அரிமா சங்கம் மூலம் இலவச மருத்துவ முகாம் 26.08.2009 புதன்கிழமை காலை 10.00 மணியளவில் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியினை மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் திரு. பரிதி இளம்வழுதி அவர்கள் மரக்கன்று நட்டு இலவச மருத்துவ முகாமை தொடங்கி வைத்து சிறப்புரை ஆற்றினார்.

கூடுதல் தலைமைச் செயலர்/சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் துணைத்தலைவர் திருமதி. சூசன் மாத்யூ, இ.ஆ.ப. வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை முதன்மை செயலர் திரு சுர்ஜீத் கே.சௌத்ரி, இ.ஆ.ப, அங்காடி நிர்வாகக் குழுவின் துணைத்தலைவர் மற்றும் சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் முதன்மை செயல் அலுவலர் திரு. வெ. கண்ணுச்சாமி, இ.ஆ.ப சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் தலைமை திட்ட அமைப்பாளர், திரு. பி.எஸ். இரவீந்தரன், சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் கண்காணிப்புப் பொறியாளர் திரு. ஈ.வி.கே.எஸ். மதிவாணன் சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் திரு. நா. சீனிவாசன் ஆகியோர்களும் விழாவில் கலந்து கொண்டனர். மேலும் அரிமா சங்க மாவட்ட ஆளுநர் பி.எம்.ஜெ.எப். அரிமா ஜி. கஜேந்திரன், அரிமா சங்கத் தலைவர் எம்.வி.கே. முருகன், அரிமா சங்கத் தலைவர், அரிமா டாக்டர் ம. சதிஸ்குமார் ஆகியோரால் இலவச

2/3

மருத்துவ முகாம் நடைபெற்றது. வியாபாரிகளும் பொதுமக்களும் மருத்துவ முகாமில் பெருமளவில் கலந்து கொண்டு பயன் அடைந்தனர்.

அங்காடி நிர்வாகக் குழு உறுப்பினர்களான திரு.சௌ. ராம்மோகன், திரு.ஆ.செல்வராஜ், திரு.ஏ.துரைசாமி, திரு அ.முருகேசன், திரு. வீ.ரா.சௌந்தரராஜன், திரு கு.து. ராஜசேகரன், திரு.சு.இளங்கோவன், திரு. ந. இராமலிங்கம், திரு.கே. நீலகண்டன், திரு.ம.கௌரிசங்கர் மற்றும் திரு. எஸ்.கே. பழனிச்சாமி ஆகியோர்களும் அங்காடி வளாக வியாபார சங்கப் பிரதிநிதிகள் மற்றும் வியாபாரிகள் இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.

திரு த.அன்பழகன், முதன்மை நிர்வாக அலுவலர் (பொறுப்பு) நன்றியுரை கூறினார். அங்காடி நிர்வாகக் குழு அலுவலக பணியாளர்கள் இந்நிகழ்ச்சியினை மிக சிறப்பாக ஏற்பாடு செய்து இருந்தனர்.

3/3

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
தலைமைச் செயலகம், சென்னை-9